# எதிர்ச்சொற்கள்



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

அ

www.WorldTamilAcademy.com

அறிவே வளம்



மகிழ்ச்சி (mahizhchi)

happy

நான் வீட்டுப்பாடம் செய்து முடித்ததால் மகிழ்ச்சியாக இருந்தேன்.



கவலை (kavalai)

sad

அண்ணன் வீட்டுப்பாடம் செய்து முடிக்காததால் கவலையாக இருந்தான்.



ஊது (oodhu)

blow

பிரியா எனக்கு பலூன் ஊதிக் கொடுத்தாள்.

உறிஞ்சு (uRinju)

suck



நானும் என் தோழியும் பழச்சாறை உறிஞ்சிக் குடித்தோம்.



மேல் (mael)

up

பட்டம் மேலே பறக்கிறது.

கீழ் (keezh)

down



மரத்திலிருந்து தேங்காய் கீழே விழுந்தது.



**பகல்** (pahal)

day

நாங்கள் பகலில் வெளியில் விளையாடுவோம்.



**இரவு** (iravu)

night

நட்சத்திரங்கள் இரவில் மின்னும்.



பெரியது (periyadhu)

big

எனது அக்காவின் புத்தகம் பெரியதாக இருந்தது.



சிறியது (chiRiyathu)

small

எனது புத்தகம் சிறியதாக இருந்தது.



உள்ளே (uLLae)

inside

சுபா வீட்டின் உள்ளே வந்தாள்.



வெளியே (veLiyae)

outside

நாய் வெளியே ஓடியது.



சூடு (choodu)

Hot

அப்பா சூடாக உணவு சமைக்கிறார்.



குளிர்ச்சி (kuLirchi)

Cold

தம்பி மதியம் குளிர்ச்சியான பனிக்கூழ் சாப்பிட்டான்.



வேகமாக (vaehamaaha)

fast

என் அப்பா மகிழுந்தை (கார்) வேகமாக இயக்கினார்.



மெதுவாக (medhuvaaha)

slow

என் அம்மா மிதிவண்டியை மெதுவாக ஓட்டினார்.



உயரம் (uyaram)

tall

எனது அப்பா உயரமாக இருக்கிறார்.



குட்டை (kuttai)

short

என் தம்பி குட்டையாக இருக்கிறான்.



www.worldtamilacademy.com



திற (thiRa)

open

உமா அண்ணனின் அறைக் கதவைத் திறந்தாள்.



மூடு (moodu)

close

அம்மா மகிழுந்தின் (கார்) கதவைக் கவனமாக மூடினார்.



நில் (nil)

stand

பயணசீட்டு பெற வரிசையில் நில்.



உட்கார் (utkaar)

sit


பேருந்தில் பயணியர் இருக்கையில் உட்கார்.



கோபம் (koabam)

angry

அண்ணன் கோபத்தால் பொருட்களைச் சேதப்படுத்தினான்.



கனிவு (kanivu)

kindness

நாய்க்குட்டிக்கு நான் கனிவுடன் உணவு பரிமாறினேன்.



www.worldtamilacademy.com



அழகு (azhahu)

beautiful

நண்பனின் பூனை அழகாக இருந்தது.



அகோரம் (ahoaram)

ugly

வீட்டிற்குள் வந்த பூச்சி அகோரமாக இருந்தது.



சுத்தம் (suththam)

clean

செல்வி கைகளைச் சுத்தமாகக் கழுவுகிறாள்.



அசுத்தம் (asuththam)

dirty

செல்வனின் காலணிகள் அசுத்தமாக உள்ளன.



நிறைவு (niRaivu)

full

கூடையில் பழங்கள் நிறைய இருக்கின்றன.



குறைவு (kuRaivu)

less

குவளையில் பழச்சாறு குறைவாக உள்ளது.



கடினம் (kadinam)

hard

பாறைகள் கடினமாக உள்ளன.



மென்மை (menmai)

soft


தலையணைகள் மென்மையாக உள்ளன.



உயரம் (uyaram)

high

விமானம் உயரமாகப் பறந்தது.



தாழ்வு (thaazhvu)

low

குருவி தாழ்வாகப் பறந்தது.



புதிய (pudhiya)

new

நான் வாங்கிய பொம்மை புதியது.



பழைய (pazhaiya)

old

அண்ணனின் புத்தகப்பை பழையது.



இனிப்பு (inippu)

sweet

நண்பன் தனது பிறந்தநாளுக்கு இனிப்பு வழங்கினான்.



கசப்பு (kasappu)

bitter

மருத்துவர் கொடுத்த மாத்திரை கசப்பாக இருந்தது.



சிரிப்பு (chirippu)

laugh

குழந்தை பொம்மையை வைத்து சிரித்து விளையாடியது.



அழுகை (azhuhai)

cry

குழந்தையிடம் இருந்து பொம்மையை வாங்கியதும் அழுதது.



வாங்குதல் (vaanguthal)

buying

நான் புதிய எழுதுகோல் வாங்கினேன்.



விற்றல் (vitral)

selling

கடைக்காரர் பழங்கள் விற்றுக் கொண்டிருந்தார்.




## வெற்றி (vetRi)

success

தோழி ஓட்டப்பந்தயத்தில் சிறப்பாக ஓடி வெற்றி பெற்றாள்.

## தோல்வி (thoalvi)

failure



தோழன் ஓட்டப்பந்தயத்தில் கீழே விழுந்ததால் தோல்வி அடைந்தான்.



கொடு (kodu)

give


கோகுல் நண்பனுக்குப் புத்தகம் கொடுத்தான்.



பெறு (peRu)

get

அம்மாவிடமிருந்து சிற்றுண்டியைப் பெற்றுக்கொண்டேன்.



**சிரமம்** (chiramam)

tough

சிரமமான கணிதத்தை ஆசிரியரிடம் கேட்டறிந்தேன்.



**எளிய** (eLiya)

easy

அம்மாவின் உதவியுடன் படத்தை எளிதாக வரைந்தேன்.



முன்னதாக (munnadhaaha)

early

நான் அதிகாலையில் சூரிய உதயத்திற்கு முன்னதாக எழுவேன்.

தாமதமாக (thaamadhamaaha)

late



நண்பன் பள்ளிக்குத் தாமதமாக வந்தான்.



எழும் (ezhum)

rise

சூரியன் அதிகாலையில் எழும்.



மறையும் (maRaiyum)

set

சூரியன் மாலையில் மறையும்.



மிதக்கும் (midhakkum)

float

காகிதக்கப்பல் நீரில் மிதக்கும்.

மூழ்கும் (moozhhum)

sink



கூழாங்கல் நீரில் மூழ்கும்.



குண்டு (kuNdu)

fat

யானை குண்டாக இருக்கிறது.



மெலிவு (melivu)

silm

யானை உண்ணும் கரும்பு மூங்கிலைப் போல மெலிவாக இருக்கிறது.



இழு (izhu)

pull

தம்பி நாற்காலியை இழுக்கிறான்.



தள்ளு (thaLLu)

push

சிறுவன் சக்கர நாற்காலியைத் தள்ளுகிறான்.



அகலம் (ahalam)

width

நெடுஞ்சாலை அகலமாக இருந்தது.

ஒடுக்கம் (odukkam)

narrow




தெரு ஒடுக்கமாக இருந்தது.



மேடு (maedu)

ridge

என்னுடைய அப்பா மகிழுந்தை (கார்) மேட்டில் ஏற்றினார்.



பள்ளம் (paLLam)

pit

சாலையில் உள்ள பள்ளத்தில் தண்ணீர் தேங்கி இருந்தது.



நன்மை (nanmai)

good

உடற்பயிற்சி செய்வது உடலுக்கு நன்மையைத் தரும்.

தீமை (theemai)

bad



அளவுக்கு அதிகமாக சாப்பிடுவது உடலுக்கு தீமையைத் தரும்.

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

அ

www.WorldTamilAcademy.com

அறிவே வளம்



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com